**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.401/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-9</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சித்திரைவேல் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | சிவகங்கை | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 05th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது காரைக்குடி இரயில்வே காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 21.05.2025ம் தேதி, நான் ஊத்துமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, பாவூர்சத்திரம் காவல்நிலைய குற்றஎண்.171/2023 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 15.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜான் செல்லப்பா மற்றும் அருள்ராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர், 16.30 மணிக்கு திப்பணம்பட்டி மெயின்ரோட்டில் வசந்தா ஸ்டோருக்கு சுமார் 75 மீட்டருக்கு தெற்கே சிவன் மெடிக்கல் கடைக்கு அருகே எதிரி கணேசன் என்பவர் விட்டுச் சென்ற TN-76-AS-4019 என்ற பதிவெண் கொண்ட பிக்அப் லோடு வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர், சாட்சிகள் சுடலை, ராஜேஷ், இசக்கிசெல்வன், ஜான்

செல்லப்பா, அருள்ராஜ், மாரியப்பன் மற்றும் உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அ.சா.ஆ.8** ஆகும். TN-76-AS-4019 என்ற பதிவெண் கொண்ட பிக்அப் லோடு வாகனம் – **அ.சா.பொ.1** ஆகும். பின்பு, 01.06.2023ம் தேதி, பாவூர்சத்திரம் பொறுப்பு ஆய்வாளர் திருமதி.சுதந்திராதேவி மருத்துவ விடுப்பு முடிந்து அறிக்கை செய்ததினால், வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து, எவ்வளவு நேரம் கழித்து நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 15.15 மணிக்கு முதல்தகவல்அறிக்கை ஒப்படைக்கப்பட்டது. முதல்தகவல்அறிக்கை காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பப்பட்டது என்றால் இது குறித்து வழக்கு கோப்பில் துலங்கவில்லை. முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து, 14 நாட்கள் கழித்து நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் வழக்கு கோப்பில் துலங்கவில்லை. புகார் எங்கு வைத்து, யார் எழுதினார் என்றால் வழக்கு கோப்பில் துலங்கவில்லை. சிவன் மெடிக்கல் கடை முன்பாக தென்வடல் ரோட்டின் அகலம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 12 அடி இருக்கும்.

நான் அத்தாட்சி தயார் செய்துள்ள பிக்அப் வாகனம் சிவன் மெடிக்கல் முன்னால் எவ்வளவு நேரம் நின்றது என்று வழக்கு கோப்பில் துலங்கும் என்றால் 09.30 மணியிலிருந்து அந்த இடத்தில் தான் நிற்கிறது. சிவன் மெடிக்கல் முன்னால் அதிகமான போக்குவரத்து நெருக்கடி உள்ள இடம்

என்றாலும், அந்த இடத்தில் வாகனம் நின்றிருக்க முடியாது என்றாலும் சரியல்ல. போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் நிறுத்தப்பட்டிருந்தது. சிவன் மெடிக்கல் முன்னால் வாகனம் நின்றதாக புகைப்படம் எடுத்து ஆஜர் செய்யவில்லை. அ.சா.1 குடியிருந்ததாக சொல்லப்படும் வீடானது குற்றாலப்பூமி(அரசு புறம்போக்கு அனுபவத்தால் உரிமை வந்தது.) என்றால் அது பற்றி என்னுடைய விசாரணையில் துலங்காது.

இந்த சம்பவத்திற்கு முன்னால் 13.05.2023 ம் தேதி, அ.சா.1, எதிரியின் சகோதரரை தாக்கியதாக ஒரு வழக்கு எங்கள் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 பஜாஜ் ஷோ ரூமில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.1 பயன்படுத்தியதாக சொல்லப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் உரிமையாளர் பெயர் வழக்கு கோப்பில் துலங்காது. அவர் மெக்கானிக்காக வேலைக்கு வந்தவர் ஆவார். அ.சா.1-டம் புகார் மனு சார்பு ஆய்வாளர் கோவிந்தராஜ் வாங்கியுள்ளார். அ.சா.1 க்கு வெளிக்காயம் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 கிழிந்த ஆடைகள் எதுவும் என்னிடம் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 ஐ நான் தென்காசி மருத்துவமனையில் வைத்து 21.05.2023 அன்று மாலை விசாரணை செய்தேன். வாக்குமூலத்தை நான் கைப்பட எழுதினேனா? என்றால் மடிக்கணினி மூலம் பதிவு செய்தேன். அத்தாட்சியை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் வழக்கு கோப்பில் துலங்காது. அ.சா.1 என்னுடைய விசாரணையில் "என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு, எதிரி பார்க்கும் போது என்னை முறைப்பார்" என்று கூறியுள்ளாரா? என்றால் கூறியுள்ளார். வசந்தா மளிகைக்கடையின் உரிமையாளரை நான் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை. சசிகுமார்

ேஹாட்டல் உரிமையாளரை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. வசந்தா மளிகைக்கடையில் சாமான் வாங்கியதாக ரசீது அ.சா.1 ஆஜர்படுத்தவில்லை. பிக்அப் வாகனத்தின் உரிமையாளர் என்று வழக்கு கோப்பில் துலங்கவில்லை. அ.சா.1 “உன்னை வண்டி ஏற்றி கொன்றால், ரூ.1800/- அபராதம் என்று" எதிரி சொன்னதாக என்னிடம் விசாரணையில் கூறினாரா? என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கும், பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்குமிடையில் ஒன்றரை கி.மீ தூரம் உள்ளது என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும்.

அ.சா.1 காவல்நிலையத்திற்கு வந்து மெடிக்கல் மெமோ வாங்கினாரா? என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் கூறியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, எதிரியின் சகோதரரை அடித்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி, சமாதானம் பேசும் போது எதிரி அதற்கு இடையூறாக இருந்ததினால், அ.சா.1 ன் தாய்மாமா முத்து ஆசாரியின் அரசியல் செல்வாக்கு காரணமாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும், நான் சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும், எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்யோசனையின் பேரில் தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. அ.சா.1 உதவி ஆய்வாளரிடம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் உண்மையல்ல என தெரிந்ததினால், உதவி ஆய்வாளர் நிராகரித்தார் என்றாலும், 108 ஆம்புலன்ஸில் சென்றால் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்படும் எனத் தெரிந்து, அ.சா.1, 108 ஆம்புலன்ஸில் மருத்துவமனை சென்று வேண்டுமென்றே சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 சொல்லியது போல் சம்பவம்

நடைபெறாததினால் தான் புகார் மனு எங்கு, யாரால் எழுதப்பட்டது என்று வழக்கில் துலங்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. C. Ravichandran, Assistant Programmer முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 1ம்எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2025.11.05
15:21:03 +0530